**தலவாகலை லிந்துல நகர சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தலவாகலை லிந்துல நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1. மீளாய்வாண்டினுள் சபையின் நிதியினூடாக செயற்படுத்தப்பட்ட 04 வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா.2,737,173 பல்வேறு கடன் பட்டோரிலும் கடன் பல்வேறு கடன் கொடுத்தோரிலும் பதிவு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| 2. மீளாய்வாண்டினுள் களஞ்சியப் பொருட்கள் கொள்வனவு ரூபா. 8,176,642 பேரேட்டுக் குறிப்பு இல.23இனூடாக பொதுக் களஞ்சியசாலைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு வருமானச் செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக வருடத்தின் வருமானம் அத் தொகையினால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| 3. மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று சபைக்குச் சொந்தமான 02 வங்கிக் கணக்குகளுடன் தொடர்பான செல்லுபடியாகாத காசோலைகளின் பெறுமதி ரூபா. 742,107 நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படாது செல்லுபடியாகாத காசோலைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| 4. ரோனியோ | | |
| இயந்திரமொன்றினதும் நிழற்படப் பிரதி இயந்திரமொன்றினதும் பக்ஸ் இயந்திரமொன்றினதும் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| 5. இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா. 80,407 மற்றும் வங்கியினால் அறவிடப்பட்டிருந்த வங்கிக் கட்டணம் ரூபா. 965 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| 6. முன்னைய வருடத்தின் இறுதியில் கடன்பட்டோரின் கீழ் கணக்கிடப்படாத காணி விற்பனைக்கான முத்திரைக் கட்டணம் ரூபா. 953,500 மீளாய்வாண்டினுள் பெறப்படும் பொழுது திரண்ட நிதியில் வைப்பிலிடப்பட வேண்டிய போதும் பெற வேண்டிய முத்திரக் கட்டணக் கணக்கில் வரவிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| 7. சபைக்குச் சொந்தமான ஒரு டிரக்டர் வண்டியின் பெறுமதி ரூபா. 1,463,200 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| 8. மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வியாபாரக் கடன்படுநர் மீதி ரூபா. 9,000,169 ஆகவிருந்த போதும் அது ரூபா. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| 10,204,552 என்பதாக ரூபா. 1,204,383 இனால் கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| 9. மீளாய்வாண்டின் இறுதியில் வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா. 10,773,311 ஆகவிருந்த போதும் அது ரூபா. 9,240,520 என்பதாக ரூபா. 1,532,791 இனால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஆ) இணக்கமடையாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 08 கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் அக் கணக்கு மீதிகளுடன் தொடர்பான உபயோக ஆவணங்களில் காட்டப்பட்ட மீதிகளுக்கிடையில் ரூபா. 2,492,355 வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசம் இனங்காணப்பட்டு சரிசெய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று 02 ஆண்டுகள் தொடக்கம் 16 ஆண்டுகள் வரையிலான காலம் கடந்துள்ள 04 கணக்கு மீதிகளுடன் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா. 1,739,497 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டு முதல் 08 ஆண்டுகள் வரையான காலம் கடந்துள்ள ரூபா 847,692 ஆன செலுத்த வேண்டிய 07 கணக்கு மீதிகள் தீர்வுசெய்யப்படாமை | செலுத்தவேண்டிய மீதிகள் தீர்வுசெய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 71,222,617 பெறுமதியான 02 கணக்கு மீதிகள் மற்றும் ரூபா. 4,414,837 பெறுமதியான 02 பேரேட்டுக் குறிப்புகள் துணை ஆவணங்கள் மற்றும் பெறுமதியை உறுதி செய்யும் சான்றுகள் காணப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிக்க முடியவில்லை. | பெறுமதியுடன் கூடிய சரியான துணை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவு | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 | செல்லுபடியாகாத காசோலைகளின் பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,547,426 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,096,333 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,671,954 | 5,447,269 | 5,302,298 | 3,540,481 | 6,612,500 | 5,480,131 | 4,375,708 | 3,395,510 |
| (ii) | வாடகை | 8,413,423 | 7,338,353 | 7,894,782 | 1,633,653 | 7,529,289 | 9,071,720 | 7,499,718 | 5,716,044 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,371,000 | 782,000 | 782,000 | - | 1,331,000 | 857,000 | 857,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 16,198,524 | 6,685,996 | 6,731,388 | 3,159,170 | 10,631,986 | 1,675,917 | 1,626,429 | 8,919 |
| | மொத்தம் | 31,654,901 | 20,253,618 | 20,710,468 | 8,333,304 | 26,104,775 | 17,084,768 | 14,358,855 | 9,120,473 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீதவரி, வீட்டு வாடகை மற்றும் பேரூந்துத் தரிப்பிட சிற்றுண்டிச் சாலை வாடகை ஆகியன அறவிடல் மந்த நிலையில் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மண்டப வாடகை மற்றும் பேரூந்துத் தரிப்பிட சிற்றுண்டிச் சாலை வாடகை அறவிடப்படலின் முன்னேற்றம் திருப்திகரமானதாக இருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 2,854,826 காணி விற்பனைக்கான முத்திரைக் கட்டணம் ரூபா. 167,000 அறவிடப்பட வேண்டியிருந்தது. | குறித்த தொகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக நகர சபை போதியளவில் அறிந்திருக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில் லை |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான இல. 86, வனிகசேகர சதுக்கத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்திற்கான 2019.12.31ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய | குறித்த நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை ரூபா. 200,499 அறவிடப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (ஆ) | சபையினால் நடாத்தப்படுகின்ற காணி குத்தகை வரி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 11 குத்தகைக்காரர்களிடமிருந்து குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகைக்காரர் கள் தற்பொழுது காணிகளில் உரிமை கொண்டிருப்பார் களாயின், ஒப்பந்தங்களைப் புதுப்பித்து குத்தகை அறவிடுவதற்கா ன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த குத்தகைக்காரர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன், அவர்கள் ஒப்பந்தங்களைப் புதுப்பிக்காததன் காரணமாக ஒப்பந்தங்கள் செல்லுபடியற்றதாகியு ள்ளன. |
| (இ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய வகையிலான வியாபாரங்களை இனங்காண்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படாமை. | சபைக்குக் கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திர க் கட்டணம் அறவிடப்படல் வேண்டும் | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய வியாபாரங்களை இனங்கண்டு அவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுட ன், அனுமதிப்பத்திரம் பெறப்படாதவிடத்து சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 பதவிகளில் காணப்பட்ட 30 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை . | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 17 ஆந் திகதிய மமா.உ.ம.ஆ./2016/3 ஆம் இலக்க | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| மத்திய மாாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு அமைவாக கடைகளுக்காக மதிப்பிடப்பட்ட மாத வாடகையானது 5 வருடங்களுக்கு ஒரு முறையாவது திருத்தியமைக்கப்பட வேண்டியிருந்த போதும், சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையில் அமைந்துள்ள 30 கடைகளுக்கான வாடகை 2007ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் செயற்படல் வேண்டும் | |
| 1988 மே 17 திகதியும் 1988/22 இலக்கமும் கொண்ட உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு அமைவாக உள்ளூராட்சி மன்றங்களினால் வரி அறவிடப்படுகின்ற சொத்துக்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறையாவது மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வரி அறவிடப்படுகின்ற சொத்துக்கள் 2011ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்டு வந்துள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

3.5 சொத்து முகாமைத்துவம்

3.5.1 பயன்பாடற்ற/குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 2014 மற்றும் 2015 வருடங்களில் ரூபா. 1,746,818 செலவில் தலவாகலை பெருந்தோட்டத்திற்குச் சொந்தமான ஒரு காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மிடில்டன் உல்லாச விடுதிக் கட்டடம் 2019ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன், காணியின் உரிமை தொடர்பான பிரச்சினை | காணியின் உரிமை தொடர்பான பிரச்சினை தீர்க்கப்பட்டு சபைக்கு வருமானம் ஈட்டித்தரும் வழிமுறை மேற்கொள்ளப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| காரணமாக வாடகைதாரருக்கு அதனை நடாத்திக்கொண்டு செல்ல முடியாது போனதால், நிர்மாணிப்புக்காகச் செலவிடப்பட்ட ரூபா. 1,746,818 பிரயோசனமற்ற செலவாக மாறியிருந்தது. | | |
| முிடில்டன் உணவு விற்பனை நிலையத்தினை 2019ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு விட்ட வாடகைதாரரிடமிருந்து 2019 டிசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 44,358 அறவிடப்பட வேண்டுமென ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அவரால் வியாபாரம் கொண்டு நடாத்தப்பட்டமைக்கான சான்றுகள் இல்லாதிருந்ததுடன், இக் கட்டடமும் செயற்பாடற்றுக் காணப்பட்டது. | குறித்த சொத்து பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

3.5.2 வாகனப் பயன்பாடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா. 6,180,000 செலவில் 2010ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மைக்ரோ கப் வாகனம் 2018 ஜனவரி தொடக்கம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | குறித்த சொத்து பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |
| சுபைக்குச் சொந்தமான, புத்தகப் பெறுமதி ரூபா. 980,000 கொண்ட இஸுஸு ரக லொரி வண்டி 2018 பெப்ரவரி தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், அது 2019 டிசம்பர் 31ஆம் திகதியாகும் பொழுதும் பழுதுபார்க்கப்படாமல் பாவனையற்றிருந்தது. | பழுதுபார்த்து பயன்படுத்தப்படுவதற்கு அல்லது பொருத்தமான முறையில் ஒதுக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

3.6 **பெறுகைகள்**

**ஓப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் நிதி பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படவிருந்த ரூபா. 599,000 பெறுமதியான 02 நிர்மாணங்களின் வேலைகளுக்காக ரூபா. 103,789 முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதும், அந் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஜனவரி 20ஆம் திகதியாகும் பொழுதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணப் பணியை முடிப்பதற்கு அல்லது முற்பணத்தினை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |
| 2006 பெறுகைகள் வழிகாட்டி மற்றும் சுற்றுநிரூபங்களுக்கு முறனாக தலவாகலை ஹேமச்சந்திர வீதிக்கு அஸ்பொல்ட் கொங்ரீட் இடுவதற்காக ரூபா. 4,000,000 மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா. 2,000,000 கொண்ட இரண்டு கட்டங்களாக 02 சமூக மைய சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இக் குறிப்பிட்ட ஒப்பந்தம் உப ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் பெறுகை நடவடிக்கைகளுக்காக சமூக மைய அமைப்புகளை இணைத்துக்கொண்டதன் உண்மையான பிரயோசனத்தை அடைய முடியாமல் போயிருந்தது. | பெறுகை நடவடிக்கைகளுக்காக சமூக மைய அமைப்புகளை இணைத்துக்கொண்ட தன் உண்மையான பிரயோசனத்தை அடையும் வகையில் செயற்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை |